**வணக்கம்**

**ஆகாஷ்வாணி - புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : மலர்விழி**

**நாள் 28.02.2025 வெள்ளிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி**

---

***தலைப்புச் செய்திகள்***

இன்று தேசிய அறிவியல் தினம் கொண்டாடப்படுவதை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கும், ஐரோப்பிய யூனியன் அதிபருக்கும் இடையே, பிரதிநிதிகள் நிலையிலான பேச்சுவார்த்தைகள், புதுடெல்லியில் இன்று நடைபெறுகின்றன.

திரு. பியூஷ் கோயல் உள்ளிட்ட மத்திய அமைச்சர்கள், இன்று தத்தம் துறை சார்ந்த ஐரோப்பிய யூனியன் ஆணையர்களை சந்தித்தனர்.

புதுச்சேரியில், சுகாதாரத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, 3 நாள் சுகாதாரத் திருவிழாவை, துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி ஆகியோர் இன்று தொடக்கி வைத்தனர்.

**மோடி அறிவியல் தினம் (15 )**

இன்று தேசிய அறிவியல் தினம் கொண்டாடப்படுவதை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி நாட்டு மக்கள் அனைவருக்கும் வாழ்த்து

தெரிவித்துள்ளார். உண்மைகளை அறிந்து கொள்ளும் ஆர்வமே, அறிவியலுக்கு அடிப்படை என்றும், அறிவியலும் அறிவும் இணையும் போது, எல்லா பிரச்சனைகளிலும் தீர்வுக்கான கதவுகள் திறக்கும் என்றும், சமூக ஊடகப் பதிவில் பிரதமர் கூறியுள்ளார். அறிவியலை பிரபலப் படுத்தவும், அறிவியல் மற்றும் புதுமையாக்கம் மூலமாக, முன்னேறிய இந்தியாவை உருவாக்கவும், அனைவரும் தொடர்ந்து பாடுபட வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார். ராமன் விளைவை, சர்.சி.வி.ராமன் கண்டுபிடித்த நாள், ஆண்டு தோறும் தேசிய அறிவியல் தினமாக கொண்டாடப்படுகிறது. **அறிவியல்-தொழில்நுட்பத் துறையில் உலகத் தலைமைக்கு இந்திய இளைஞர்களை தயார்படுத்துவதன் மூலம், முன்னேறிய இந்தியாவை உருவாக்குதல் என்ற மையக்கருத்து அடிப்படையில் இவ்வாண்டு தேசிய அறிவியல் தினம்** கொண்டாடப்படுவதும் குறிப்பிடத் தக்கது.

அறிவியல் ஜிதேந்திரா (7)

சந்திரயான் 3 விண்கலம், மற்றும், விண்வெளியில் வைத்தே செயற்கைக் கோள்களை ஒருங்கிணைப்பதற்கான space docking பரிசோதனையின் வெற்றி மூலம், இந்தியா விண்வெளித் துறையில் தனது திறன்களை, உலகிற்கு வெளிப்படுத்தி இருப்பதாக, மத்திய அறிவியல்-தொழில்நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற, தேசிய அறிவியல் தின விழாவில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

ராஜ் நாத் அறிவியல் - (15)

பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ் நாத் சிங் இன்று ஹைதராபாத்தில், பாதுகாப்புத்துறை மற்றும் வானூர்திகள் பற்றிய, **விக்யான் வைபவ்** கண்காட்சியைத் தொடக்கி வைத்தார். தொடர்ந்து பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் மற்றும் இளைஞர்களிடையே அவர் பேசுகையில், பொருளாதார வளர்ச்சியில், அறிவியலின் பங்கு முக்கியமானது என்றும், மனித குலத்தின் ஒட்டுமொத்த நன்மைக்கே, அறிவியலை பயன்படுத்த வேண்டும் என்றும் கூறினார். எதிர்காலத்திற்கு ஏற்றவர்களாக இளைஞர்களை தயார் படுத்த, நாட்டில் ஆரோக்கியமான அறிவியல் சூழல் அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டே, அறிவியல் கட்டமைப்பின் மேம்பாட்டிற்கு அரசு மிகுந்த முக்கியத்துவம் அளிப்பதாக அவர் தெரிவித்தார். பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, இம்மாபெரும் விக்யான் வைபவ் கண்காட்சியில், இந்தியாவில் பாதுகாப்பு வல்லமையை வெளிப்படுத்தும் வகையில், ஹைப்பர்சானிக் ஏவுகணைகள், அர்ஜூன் ரக பீரங்கிகள் மற்றும், அதி நவீன ட்ரோன்கள் மற்றும், ரேடார்களும், காட்சிப்படுத்தப் பட்டுள்ளன.

மோடி – ஐரோப்பிய யூனியன் - (17)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஐரோப்பிய யூனியன் அதிபர் திருமதி. உர்சுலா வான்-டெர் லெயேன் ஆகியோருக்கு இடையே, பிரதிநிதிகள்

நிலையிலான பேச்சுவார்த்தைகள், புதுடெல்லியில் இன்று நடைபெறுகின்றன. 2 நாள் இந்திய பயணமாக நேற்று இரவு புதுடெல்லி வந்து சேர்ந்த திருமதி. லெயேனுடன், ஐரோப்பிய யூனியன் அமைப்பின் 22 புதிய ஆணையர்களும் முதல் முறையாக இந்தியா வந்துள்ளனர். இந்தியன் ஆயில் நிறுவனமும், டாடா மோட்டார்ஸ் இணைந்து உருவாக்கியுள்ள, ஹைட்ரஜன் எரிபொருள் பேருந்தில் இவர்கள், புதுடெல்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். ஐரோப்பிய யூனியன் அதிபர் மற்றும் ஆணையர்களின் வருகையினால், இந்தியாவிற்கும், ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள், மேலும் வலுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவிற்கும், ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகம், கடந்த 10 ஆண்டுகளில் 90 சதவிகிதம் அதிகரித்து இருப்பதும், புதுப்பிக்கவல்ல எரிசக்தி மற்றும், ஹைட்ரஜன் எரிபொருள் துறையில் விரிவான இருதரப்பு ஒத்துழைப்பு நிலவி வருவதும் குறிப்பிடத்தக்கது.

அமைச்சர்கள் - யூனியன் (16)

இதற்கிடையே, மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல், இன்று புதுடெல்லியில், ஐரோப்பிய யூனியனின் வர்த்தக மற்றும் பொருளாதார பாதுகாப்புத் துறை ஆணையர் திரு. மாரோஸ் செஃப்கோவிக்-கை சந்தித்துப் பேசினார். இந்தியாவிற்கும் ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கும் இடையிலான, வரியில்லா வர்த்தக ஒப்பந்தம் குறித்து தாங்கள் விவாதித்ததாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில், திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புத் துறைக்கான மத்திய இணை அமைச்சர் திரு. சஞ்சய் சேத், இன்று புதுடெல்லியில் ஐரோப்பிய யூனியனின் பாதுகாப்பு மற்றும் விண்வெளித் துறை ஆணையர் திரு. ஆண்ட்ரியு குபிலியஸ்-சை சந்தித்துப் பேசினார். பாதுகாப்புத் துறையில் இருதரப்பு ஒத்துழைப்பை

வலுப்படுத்துவது குறித்தும், குறிப்பாக இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில், தகவல் பரிமாற்றத்தில் ஒத்துழைப்பது குறித்தும், இந்த சந்திப்பின்போது விரிவாக விவாதிக்கப்பட்டது. ஐரோப்பிய நிறுவனங்களுடன் இணைந்து, இந்தியாவில் பாதுகாப்பு உற்பத்தி வசதிகளை மேம்படுத்துவது குறித்தும் விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டன.

சுகாதாரத் திருவிழா -1 (11)

புதுச்சேரியில், உலக சுகாதார தினத்தை முன்னிட்டு, சுகாதாரத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, 3 நாள் சுகாதாரத் திருவிழாவை, துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி ஆகியோர் இன்று தொடக்கி வைத்தனர். Dreams-24 திட்டத்தின் கீழ், டெங்கு காய்ச்சலுக்கு எதிரான விழிப்புணர்வு மற்றும் தடுப்பு பணிகளில் சிறப்பான முறைகளில் செயல்பட்ட ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் தன்னார்வ தொண்டர்களுக்கு, சான்றிதழ்களை இவர்கள் வழங்கினர். சட்டப் பேரவை தலைவர் திரு. ஆர். செல்வம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு. சாய் சரவணன் குமார், மற்றும் தலைமைச் செயலர்-சுகாதாரத்துறைச் செயலர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளும், தொடக்க விழாவில் கலந்து கொண்டனர்.

சுகாதாரத் திருவிழா -2 (9 )

துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் விழாவில் பேசுகையில், பிரதமர் திரு.நரேந்திர மோடி தலைமையிலான அரசு மக்களுக்கான பல்வேறு சுகாதாரத் திட்டங்களை, சிறப்பான முறையில் செயல்படுத்துவதால், மானுட மேம்பாட்டுக் குறியீட்டில், இந்தியா உயர்ந்து இருப்பதாக கூறினார். மக்களுக்கான மருத்துவ சேவைகளை வழங்குவதில், புதுச்சேரி முன்னோடி மாநிலமாக திகழ்வது குறித்து அவர் மகிழ்ச்சி வெளியிட்டார். மத்திய-மாநில அரசுகள் சிறப்பான திட்டங்களை அமல்படுத்தி வருகின்ற போதிலும், மக்களிடையே இத்திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு மேம்பட்டால் தான் திட்டங்கள் முழுமையான வெற்றியடையும் என்று அவர் குறிப்பிட்டார். துணைநிலை ஆளுநர் மேலும் கூறுகையில் …

(வாய்ஸ்)

சுகாதாரத் திருவிழா -3 (13 )

சுகாதாரத் திருவிழாவின் தொடக்க விழாவில் முதலமைச்சர் திரு.ரங்கசாமி பேசுகையில், புதுச்சேரி அரசு, மக்களுக்கான சுகாதார சேவைகளை சிறப்பான முறையில் வழங்கி வருவதாகவும், மக்கள் தொகைக்கு ஏற்ப அமைய வேண்டிய ஆரம்ப சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை, மற்ற மாநிலங்களைவிட புதுச்சேரியில் தான் அதிகம் என்றும் கூறினார். கிராமப் புறங்களில் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளை புதுச்சேரி அரசு செயல்படுத்தி வருவதாகவும், அடுத்த ஆண்டு சுகாதாரத் திருவிழா கிராமப்புறத்தில் நடத்தப்படும் என்றும் அவர்

தெரிவித்தார். புதுச்சேரியில் இத்தனை வசதிகள் இருந்தும், சிறப்பு சிகிச்சைக்கு சென்னைக்கு செல்ல வேண்டிய நிலையை மாற்றும் வகையில், புதுச்சேரியிலேயே சிறப்பு மருத்துவமனை அமைக்க வேண்டும் என்பதே தமது எண்ணம் என்றும், திரு. ரங்கசாமி குறிப்பிட்டார். முதலமைச்சர் மேலும் கூறுகையில் ....

**(வாய்ஸ்)**

**சுகாதாரத் திருவிழா -4 (10 )**

கருவடிக் குப்பத்தில் உள்ள, காமராஜர் மணிமண்டபத்தில், தினசரி மதியம் 3 மணி முதல், இரவு 8 மணி வரை நடைபெறும், இந்த சுகாதார விழாவில், பொது சுகாதார சேவைகளும், புற்றுநோய் கண்டுபிடிப்பு வரையிலான பல்வேறு மருத்துவ பரிசோதனைகள், மற்றும், ஆலோசனைகளும், பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன. தேசிய சுகாதார இயக்கம் மூலமான பல்வேறு திட்டங்கள் குறித்து சுகாதார கண்காட்சி விழாவில் இடம் பெறுகிறது. ஆயுஷ் மற்றும் யோகா உடற்பயிற்சி முறைகள் குறித்து பொதுமக்களுக்கு விளக்கம் அளிக்கப் படுகிறது. ஆரோக்கிய உணவு கண்காட்சி உட்பட பல்வேறு அம்சங்களும் விழாவில் இடம் பெறுகின்றன.

## EPF வட்டி - (8 )

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி-EPF மீதான வட்டி விகிதத்தை, நடப்பு நிதியாண்டிலும், 8.25 சதவிகிதமாக தொடர்ந்து பராமரிக்க, EPFO மத்திய குழு பரிந்துரை செய்துள்ளது. இந்த பரிந்துரை மத்திய நிதி அமைச்சகத்தின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும், ஒப்புதல் கிடைத்த பின்னரே, வட்டித் தொகை, EPF கணக்குகளில் வரவு வைக்கப்படும் என்றும், சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. நாடு முழுவதும் சுமார் 7 கோடிக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், வருங்கால வைப்பு நிதியில் கணக்கு வைத்துள்ளனர்.

## பனிச்சரிவு - (5)

உத்தராகண்ட் மாநிலம், சமோலி மாவட்டத்தில் மனா பகுதியில் இன்று காலை ஏற்பட்ட பனிச்சரிவில் 57 தொழிலாளர்கள், சிக்கியதை தொடர்ந்து, மாவட்ட நிர்வாகம் மீட்பு பணிகளில் ஈடுபட்டு வருகிறது. பனிச்சரிவில் இருந்து இதுவரை 10 பேர் மீட்கப் பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

**ஓம் பிர்லா (10)**

இந்தியாவில் நிதி சார்ந்த சட்டங்கள் எளிமையாக்கப் படுவதால், நாட்டில் முதலீட்டுச் சூழல் மேம்பட்டுள்ளதாகவும், இந்தியாவில் முதலீடு செய்வதில், முதலீட்டாளர்களின் ஆர்வம் அதிகரித்து வருவதாகவும், மக்களவை தலைவர் திரு. ஓம் பிர்லா கூறியுள்ளார். முன்னேறிய இந்தியவிற்கான பயணத்தில், **மாறிவரும் சூழல்களுக்கு ஏற்ப மாற்றங்களை கைக் கொள்ளுதல்** என்ற தலைப்பில் புதுடெல்லியில் இன்று நடைபெற்ற கருத்தரங்கில் அவர் உரையாற்றினார். இந்திய நிதி நிறுவனங்களுக்கு தற்போது உலக அளவில் மரியாதை கிடைப்பதாக தெரிவித்த அவர், நீடித்த வாழ்க்கை முறைகளுக்கு மாறுவதிலும், உலகின் முன்னணி நாடாக இந்தியா திகழ்வதாகக் கூறினார்.

முர்மு (16 )

நீதியின் அடிப்படையிலான, முன்னேறிய இந்தியா ஒன்றை உருவாக்குவதில், தடய அறிவியல் துறைக்கு முக்கியப் பங்கு இருப்பதாக, குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார். இன்று குஜராத் மாநிலம், காந்தி நகரில், தேசிய தடய அறிவியல் பல்கலைக் கழகத்தின் 3ஆவது பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர், பாரம்பரியமும் நவீனமும் கலந்த, அனைவருக்கும் நீதி கிடைக்கும் வகையிலான இந்தியாவே, முன்னேறிய இந்தியா என்னும் கனவில் முக்கிய அம்சம் என்றார். விளிம்பு நிலை சமூகத்தினர் உட்பட அனைவருக்கும் நீதி கிடைப்பதை உறுதிப்படுத்த, தடய அறிவியல் மாணவர்கள் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என குடியரசு தலைவர் கேட்டுக்கொண்டார். குற்றங்களின் தன்மை வேகமாக மாறி வரும் நிலையில், பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உடனுக்குடன் நீதி கிடைப்பதை உறுதிப் படுத்துவதில், தடய அறிவியலின் பயன்பாட்டை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார். தடய அறிவியல் துறையில், பெண்களின் பங்கேற்பு அதிகரித்து வருவது குறித்து, குடியரசு தலைவர் மகிழ்ச்சி வெளியிட்டார்.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

இன்று தேசிய அறிவியல் தினம் கொண்டாடப்படுவதை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கும், ஐரோப்பிய யூனியன் அதிபருக்கும் இடையே, பிரதிநிதிகள் நிலையிலான பேச்சுவார்த்தைகள், புதுடெல்லியில் இன்று நடைபெறுகின்றன.

திரு. பியூஷ் கோயல் உள்ளிட்ட மத்திய அமைச்சர்கள், இன்று தத்தம் துறை சார்ந்த ஐரோப்பிய யூனியன் ஆணையர்களை சந்தித்தனர்.

புதுச்சேரியில், சுகாதாரத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, 3 நாள் சுகாதாரத் திருவிழாவை, துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி ஆகியோர் இன்று தொடக்கி வைத்தனர்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS/SM/VM**